**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044353

1. District மாவட்டம் : கோவை    PS: காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு    Year: ஆண்டு : 2021    FIR No.: மு.த.அ. எண் : 25/2021/AC/CB    Date: நாள் 30.10.2021

2. (i) Act சட்டம்: PC Act, 1988 as amended    Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: by the PC (Amendment) Act    Sections பிரிவுகள்: 7(b), 7(b) r/w 12.
(iii) Act சட்டம்: 2018.    Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 29.10.2021    Date to : நாள் வரை 30-10-2021
Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல் 18.55 hrs    Time to : நேரம் வரை 03.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30-10-2021    Time : நேரம் 10.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD-VOL-I    Time : நேரம் 10.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், கணபதி, கோவை மாவட்டம். சுமார் 10 கி.மீ. வட கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V. சாந்தாமணி    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K.T. திலீபன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 55/2021    (d) Nationality : நாட்டினம் இந்திய    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் பணி ஆய்வுக்குழு அலுவலர்    (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயம்புத்தூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு. P. பசுபதி (வயது 48/2021), S/o பழனிவேல், நிலைய அலுவலர், தீயணைப்பு (ம) மீட்பு பணிகள் நிலையம், கணபதி, கோவை.
2) திரு. சு. மாணிக்கம், (வயது 23/2021) S/o. கோவிந்தராஜ், தீயணைப்போர் 10937, நிலைய எழுத்தர், தீயணைப்பு (ம) மீட்பு பணிகள் நிலையம், கணபதி, கோவை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதமில்லை -

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u>

**<u>Continuation of the FIR in Coimbatore V&AC Cr.No.25/2021/ AC/CB u/s. 7(b), 7(b) r/w 12 of PC Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018.</u>**

இன்று 30.10.2021-ம் தேதி 10.00 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் P.பரிமளாதேவி ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருமதி. V.சாந்தாமணி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயம்புத்தூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரினை பெற்று கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். Cr.No.25/2021/AC/CB, u/s. 7(b), 7(b) r/w 12 of PC Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 ஆக வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின் வருமாறு: அனுப்புநர்: திருமதி.V.சாந்தாமணி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயம்புத்தூர் மாவட்டம், பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். ந.க.எண். 1044/2021/ஜ1 நாள் 30.10.2021, அம்மையீர், பொருள் - திடீர் தணிக்கை - கோவை மாவட்டம் - தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் அலுவலகம் கணபதி, கோயம்புத்தூர் - திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் அளித்தல் - சம்பந்தமாக. கோயம்புத்தூர் மாவட்டம், கணபதி தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையத்தில், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தற்காலிக பட்டாசு கடைகள் வைத்து நடத்துவதற்கு தடையில்லா சான்று (NOC) வழங்குவதற்கு பரிந்துரை செய்ததற்காக கோவை மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புபணித்துறை அலுவலகத்திலிருந்து பெறப்படும் விண்ணப்பங்களுக்கு சம்மந்தப்பட்ட நபர்களிடம் நிலைய அலுவலர் கையூட்டு பெற்று வருவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் கோவை மாவட்டம், கணபதி, காந்திமாநகர் FCI ரோட்டில் அமைந்துள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் அலுவலகத்தினை 29.10.2021-ம் தேதி மாலை சுமார் 18.55 மணியளவில் நானும், கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.P.பரிமளாதேவி மற்றும் காவல் குழுவினருடன் இணைந்து திடீர் தணிக்கை

செய்யப்பட்டது. திடீர் தணிக்கையில் கீழ்கண்ட விபரம் தெரியவந்தது. கோவை மாவட்டம், கணபதி தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையத்தில், தீயணைப்பு வாகனங்கள் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் Bay-ல் சீருடையில் ஆஜரில் இருந்த திரு.ரா.சிவக்குமார், நிலைய அலுவலர் (போக்குவரத்து), திரு.B.கிருஷ்ணகுமார், 7775 முன்னனி தீயணைப்போர் மற்றும் திரு.M.ராஜீவ்காந்தி, தீயணைப்பாளர் ஆகியோர்களிடம் துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் குழுவினர்களை அறிமுகப்படுத்திக்கொண்டு இருக்கும்போதே அலுவலகத்திற்குள் நுழைந்த நபரை விசாரிக்க அவர் தான் நிலைய அலுவலர் என்றும் தனது பெயர் திரு.P. பூபதி என்றும் தெரிவித்தார். அவரிடமும் திடீர் தணிக்கை விபரம் தெரிவித்து, குழுவினரை அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் மேற்படி நபர்களின் முன்பு குழுவில் உள்ள அனைத்து அலுவலர்களும் சுய சோதனை செய்து முடித்து சுமார் 19.05 மணிக்கு இந்த திடீர் தணிக்கை ஆரம்பிக்கப்பட்டது. சிறிது நேரத்தில் நிலையத்திற்குள் வந்த நபரை பற்றி விசாரிக்க அவர் தான் தீயணைப்பு வீரர் 10937 மாரிமுத்து என்றும், தான் இவ்வலுவலகத்தில் நிலைய எழுத்தராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். மேற்படி அலுவலகமானது கணபதி, FCI ரோடு காந்திமாநகர் எக்ஸ்டன்சன் ரோட்டில் தெற்கு பார்த்து அமைந்துள்ளது. இந்த அலுவலகத்தின் முக்கிய நுழைவு வாயிலானது பெரிய இரும்பு கேட்டை கொண்டுள்ளது. அதன் உள்ளே நுழைந்தவுடன் வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் (Bay) TN 63 G 0331 மற்றும் TN 24 G 0745 ஆகிய பதிவெண்கள் கொண்ட தீயணைப்பு வாகனங்கள் தெற்கு பார்த்தவாறு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதனை தொடர்ந்து மேற்கு திசை பார்த்தவாறு நிலைய அலுவலகமானது அமைந்துள்ளது. அவ்வலுவலகத்தின் தென்மேற்கு மூலையில் கண்காணிப்பு அறை என்று எழுதப்பட்டிருந்த இருக்கையானது நிலைய எழுத்தரின் இருக்கையும், அதன் வலது புறம் வடக்கு பார்த்தவாறு நிலைய எழுத்தர் என்று எழுதப்பட்டிருந்த இருக்கையானது முன்னனி தீயணைப்பாளர் இருக்கையாகவும் இருந்தது. அதற்கு வலது புறம் சற்று தள்ளி நிலைய அலுவலரின் இருக்கையானது மேற்கு பார்த்தவாறு இருந்தது. அந்த இருக்கையின் அருகில் தென்கிழக்கு மூலையில் சுவற்றுடன் பதிக்கப்பட்டிருந்த இரும்பு பணப்பட்டி இருந்தது. அந்த அறையின் வடகிழக்கு மூலையில் கழிவறையும் அதனைத்தொடர்ந்து தெற்கு பார்த்தவாறு நிலையத்தின் பண்டக சாலை (Store Room) அமைந்திருந்தது. அந்த அறையை சோதனை செய்தபோது கண்காணிப்பு அறை இருக்கையின் டேபிளின் மேற்புறத்தில் தீபாவளி பண்டிகை சம்மந்தமான விழிப்புணர்வு நோட்டீசுகளும், "ROOTS ADDING VALUE" என்று எழுதப்பட்டிருந்த 2016-ம் ஆண்டிற்கான டைரியும் வைக்கப்பட்டிருந்தது. அது குறித்து நிலைய அலுவலர் பூபதியிடம்

கேட்க அந்த டைரியானது நிலைய எழுத்தர் மாரிமுத்து பயன்படுத்தி வருவதாக தெரிவித்தார். உடனே அது குறித்து மாரிமுத்துவிடம் கேட்டபோது அவர் அந்த டைரியை தான்தான் பயன்படுத்தி வருவதாகவும், அந்த டைரியை பகுதியாக பிரித்து அதன் ஒரு பகுதியில் அலுவலக குறிப்புகளும், மற்றொரு பகுதியில் இந்த வருட பட்டாசு கடைகள் சம்மந்தமாக 25 நபர்களின் பெயர் விபரம், முகவரி மற்றும் செல்போன் நம்பர்கள் குறித்து வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படி டைரியை பார்வையிட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து நிலைய எழுத்தரின் இருக்கையை பார்வையிட்டதில், குறிப்பிடும்படி எதுவும் இல்லை. இருக்கையின் பின்புறம் ஒரு தொலைபேசி மற்றும் ஒரு கணினியும் வைக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து நிலைய அலுவலரின் இருக்கையை பார்வையிட்டபோது அதில் குறிப்பிடும்படி எதுவும் இல்லை. மேலும், அந்த இருக்கையின் இடது புறமாக சுவற்றில் பதிக்கப்பட்டிருந்த இரும்பு பணப்பெட்டியை திறந்து பார்க்க அதில் ரூ.51/- இருந்தது. அதை பற்றி கேட்க அது எரிபொருள் பிடித்தம் செய்யப்பட்டது போக மீதமுள்ள தொகை என்று தெரிவித்தார். அதனை எரிபொருள் பதிவேட்டில் இருந்த பதிவுகளுடன் ஒப்பிட்டு பார்த்தபோது சரியாக இருந்தது. மேற்படி தொகை திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் நிலைய அலுவலர் திரு.பூபதி அவர்களிடம் வேறு பணம் ஏதேனும் உள்ளதா என்று விசாரிக்க அவர் தனது டேபிளுக்கு தென்புறமுள்ள சுவற்றில் கிழ மேலாக மேல்புறம் இருந்த லாப்ட்டில் இருந்த காக்கி நிற கவரை எடுத்து அதிலிருந்த பணக் கற்றையை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி காக்கி நிற காகித கவரை திறந்து பார்க்க அதில் காக்கி நிற அலுவலகக் கவர் ஒன்று பண்டிலாகவும், இரண்டு சிறிய நோட்டுக் கற்றைகளாக பணமும் இருந்தது. அந்த சிறிய நோட்டுக் கற்றைகளை எண்ணிப்பார்க்க அதில் ரூ.500 x 102 = 51,000/-ம், ரூ.200 x 50=10,000/-ம், ரூ.100 x 10=1000/-ம் மற்றும் ரூ.50 x 80 = 4000/-ம், இருந்தது. மேலும் அந்த காக்கி நிற கவரில் இருந்த அலுவலக கவரை திறந்து பார்க்க அதில் 111 எண்ணிக்கை கொண்ட 500 ரூபாய் நோட்டுகளும் (ரூ.500x 111= 55,500/-) குறிப்புகள் எழுதப்பட்ட ஒரு வெள்ளைத் தாளும் காணப்பட்டது. மேற்படி இரு கவர்களிலும் சேர்த்து மொத்தம் ரூ.1,21,500/- மட்டும் இருந்தது. மேலும் அத்துடன் இருந்த குறிப்புகள் எழுதப்பட்ட வெள்ளைத்தாளை பார்வையிட்டதில் DIWALI TEMPORARY CRACKER SHOP NOC என்று தலைப்பிடப்பட்டு எழுதப்பட்ட ஒரு வெள்ளைத் தாளில் Sl.No, RC.No. Amount, Gift Box என்றும் அதற்கு கீழே வரிசை எண்களும், அலுவலக கோப்பு எண்களும், அவற்றின் எதிரே தொகை ரூ.4500 என்றும் அதன் அருகில் கிப்ட் பாக்ஸ்

எண்ணிக்கைகளும் எழுதப்பட்டிருந்தது. அதன் மறுபக்கத்தில் Total = 1,21,500 என்றும் DFO (Wing SO II) = 92,500 என்றும், G.Box 50 என்றும், அதற்கடுத்து SO Ganapathy=24,000 என்றும், G.Box 20 என்றும், Writer = 6,000 என்றும், G.Box 10 என்றும் மற்றும் Fireman (Tea & Snacks)=500 என்றும், G.Box 6 என்றும் எழுதப்பட்டிருந்தது. மேற்படி குறிப்புகள் குறித்து நிலைய அலுவலரை கேட்டபோது அவர், தான் தடையின்மை சான்று வழங்க பரிந்துரை செய்ய யாரிடமும் எந்த தொகையையும் கேட்டு பெறுவதில்லை என்றும் யார் யாரிடமிருந்து எவ்வளவு தொகை பெறுவது என்பதை மாரிமுத்து தான் நிர்ணயம் செய்வார் என்றும் அத்தொகைகளை அவரே வசூல் செய்து தன்னிடம் கொடுப்பார் என்றும் இந்த பணம் அவ்வாறு வசூல் செய்யப்பட்ட பணம் என்றும் தெரிவித்தார். மேலும் இந்த வெள்ளை நிற தாளில் யாரால் எழுதப்பட்டது என்று விபரம் கேட்க திரு.பூபதி மற்றும் திரு.மாரிமுத்து ஆகியோர்கள் சரியான விளக்கம் எதுவும் தெரிவிக்கவில்லை. மேற்படி தொகையானது தடையின்மை சான்று வழங்கியதற்காக பெறப்பட்ட தொகை என்பதால் மேற்படி ரூ.1,21,500/-ம், அது குறித்த விபரங்கள் எழுதப்பட்டிருந்த வெள்ளைத்தாள் மற்றும் இரண்டு காக்கி நிற கவர்கள் ஆகியவைகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் இது பற்றி மாரிமுத்துவிடம் விசாரிக்க, தீபாவளி பட்டாசு கடைகள் வைப்பதற்கு நிலைய அலுவலரால் தடையின்மை சான்றுக்காக பரிந்துரை செய்யப்படும் விண்ணப்பங்களுக்கு சம்மந்தப்பட்டவர்களிடம், தான் பணம் வசூல் செய்து நிலைய அலுவலரிடம் கொடுக்கும் விபரத்தை தெரிவித்தார். நிலைய அலுவலர் திரு.பூபதி அவர்களை சோதனை செய்ய அவரிடமிருந்து ரூ.50/- மட்டும் இருந்தது. அதைபற்றி கேட்க அது அவரது சொந்தபணம் என்று சொல்ல அந்த பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.சிவக்குமார் நிலைய அலுவலர் (போக்குவரத்து) அவர்களை சோதனை செய்ய அவரிடம் தொகையேதுமில்லை. பின்னர் திரு.மாரிமுத்து என்பவரை சோதனை செய்ய அவரிடமிருந்து ரூ.80/- மட்டும் இருந்தது. அதைபற்றி கேட்க அது அவரது சொந்தபணம் என்று சொல்ல அந்த பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.கிருஷ்ணகுமார் என்பவரை சோதனை செய்ய அவரிடமிருந்து ரூ.280/- மட்டும் இருந்தது. அதைபற்றி கேட்க அது அவரது சொந்தபணம் என்று சொல்ல அந்த பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி தொகை மற்றும் அத்துடன் விபரங்கள் எழுதப்பட்டிருந்த வெள்ளைதாளைப் பற்றி கேட்க மேற்படி தொகையானது வெள்ளைத்தாளில் குறிப்பிடப்பட்டுள்ள 27 எண்ணிக்கையிலான தடையின்மை சான்றுகள் பரிந்துரை செய்ததற்காக சம்மந்தப்பட்ட தீபாவளி பட்டாசு கடைகள் உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட

தொகை என்றும், அதன் விபரங்கள் மேற்படி வெள்ளைத்தாளில் உள்ளது என்றும் தெரிவித்தார். மேற்படி வெள்ளைத்தாளில் குறிப்பிடப்பட்டுள்ள RC நம்பர்களை அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வந்த தன்பதிவேட்டில் இருந்த RC நம்பர்களுடன் கூடிய பதிவுகளை ஒப்பிட்டு பார்க்க அவைகள் சரியாக இருந்தது. பின்னர் இது சம்மந்தமான தடையின்மை சான்று மற்றும் தீ உரிமம் பதிவேட்டினை பார்வையிட்டதில் அதில் வரிசை எண்கள் 1 முதல் 8 வரையில் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தது. மீதமுள்ள 19 விண்ணப்பங்களின் பதிவுகள் பதிவு செய்யப்படாமல் இருந்தது. அது குறித்து கேட்டபோது பதிவேடுகளில் பதியப்படும் அனைத்தும் தனது உத்தரவின் பேரில் நிலைய எழுத்தர் மாரிமுத்துவால் பதிவு செய்யப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார். எனவே இது குறித்து மாரிமுத்துவிடம் விசாரிக்க தனக்கு போதிய நேரமின்மை காரணத்தினால் தான் அதில் பதிவுகளை மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்தார். அந்த பதிவேட்டின் நகல் விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது. மேலும் அஞ்சல் அனுப்புகை பதிவேடும் பார்வையிடப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் நிலைய அலுவலர் அவர்களின் உயர் அதிகாரியான மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை, கோவை மாவட்டம் அவர்களுக்கு செல்பேசி மூலமாக தகவல் தெரிவிக்கப்பட்டது. இந்த அலுவலக அறையின் வெளியே சென்று வடபுறம் இருந்த அறையை பற்றி விசாரிக்க அவ்வறையானது தீயணைப்பு வீரர்கள் ஓய்வெடுக்கும் அறை என்றும் தெரிவித்தார். அந்த அறையை பார்வையிட்டதில் தீயணைப்பு வீரர்களின் உடைமைகள் காணப்பட்டன. அவற்றை சோதனையிட்டதில் குறிப்பிடும்படியாக எதுவும் காணப்படவில்லை. தகவலின் பேரில் நாமக்கல் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறையின் மாவட்ட அலுவலர் மற்றும் கோவை மாவட்ட அலுவலர் (பொறுப்பு) திரு.அண்ணாதுரை அவர்கள் 22.50 மணிக்கு நிலையம் வந்து ஆஜரானார். அவரிடம் ஆய்வுக் குழுவினரை அறிமுகம் செய்து கொண்டு மேற்படி நடவடிக்கை சம்மந்தமாக விபரங்களை கூறி நடவடிக்கையில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டதின்பேரில் அவரும் நடவடிக்கையில் கலந்து கொண்டார். மேலும் நிலைய அலுவலரிடமிருந்து கைப்பற்றப்பட்ட குறிப்புத்தாளை மாவட்ட அலுவலர் திரு.அண்ணாதுரை அவர்களிடம் காண்பித்து கேட்க தீபாவளி பட்டாசுகடை வைக்க உரிமம் வேண்டி கோரும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை தனது அலுவலகத்தில் பதிவு செய்து, அவற்றை நிலைய எல்லையை கருத்தில் கொண்டு சம்மந்தப்பட்ட நிலைய அலுவலர்களுக்கு அனுப்பபடும் என்றும், நிலைய அலுவலர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இடங்களை கள ஆய்வு செய்து பரிந்துரைத்து ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும்

தனித்தனியே நிலைய பதிவு எண்கள் (RC) வழங்கப்பட்டு மாவட்ட அலுவலகத்துக்கு மீள சமர்ப்பிப்பதாக தெரிவித்தார். மேலும், மேற்படி வெள்ளைத்தாளில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 27 வரையிலான அனைத்து விண்ணப்பங்களும் மாவட்ட அலுவலராக பணிபுரிந்த திரு.ஜெகதீஷ் அவர்களால் கள ஆய்வு செய்ய அனுப்பட்டவைகள் என்றும் அவற்றில் 1 முதல் 26 வரையிலான விண்ணப்பங்களுக்கு அவரே தடையின்மைச்சான்று வழங்கி விட்டதாகவும் மீதமுள்ள ஒன்று மட்டும் பொறுப்பு அலுவலரான தன்னால் பெறப்பட்டு 29.10.2021-ஆம் தேதி தடையின்மைச் சான்று வழங்கப்பட்டது என்றும் தெரிவித்தார். மேலும் இந்த சோதனையின்போது இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வந்த ஆவணங்கள் பற்றி மாவட்ட அலுவலர் (பொறுப்பு) திரு.அண்ணாதுரை அவர்களிடம் கேட்க, அசல் பதிவேடுகள் மற்றும் தடையின்மை சான்று கோரிய விணணப்பங்களை நிலைய அலுவலரின் உதவியுடன் எடுத்து ஆஜர் செய்தார். மேலும் இந்த ஆவணங்கள் அலுவலகத்தின் அன்றாட பயன்பாட்டிற்கு தேவைப்படுவதாகவும், விண்ணப்பங்கள் நடவடிக்கைக்காக தேவைப்படுவதாகவும் தெரிவித்த காரணத்தால் கீழ்கண்ட ஆவணங்களை ஒளிநகல் எடுத்து மாவட்ட அலுவலரிடம் சான்றொப்பமிட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

| வ. எண் | ஆவணங்களின் விபரங்கள் | பக்கம் |
|---|---|---|
| 1 | நிலையான முன்பண பதிவேடு (30.09.2010 முதல் 25.10.2021 வரை) - நகல் | 1 – 6 |
| 2 | பணப்பதிவேடு (01.08.2017 முதல் 25.10.2021 வரை) - நகல் | 1 – 6 |
| 3 | நிலைய பொதுநாட்குறிப்பு (23.09.2021-ம் தேதி காலை 06.00 மணி முதல் 29.10.2021-ம் தேதி மாலை 17.25 மணி வரை) - நகல் | 1 – 6 |
| 4 | பணம் செலுத்தும் பதிவேடு (03.01.2006 முதல் 29.03.2021 வரை ) - நகல் | 1 – 6 |
| 5 | பணிப்பதிவேடு (01.01.2021 முதல் 29.10.2021 வரை) - நகல் | 1–10 |
| 6 | கொடுபடா சம்பள பதிவேடு (20.02.2017 முதல் 25.10.2021 வரை) - நகல் | 1 – 6 |
| 7 | தன்பதிவேடு (01.06.2020 முதல் 28.10.2021 வரை) - நகல் | 1- 8 |
| 8 | எரிபொருள் முன்பணம் மீதி ஒப்படைப்பு பதிவேடு (03.11.2020 முதல் 09.09.2021 வரை) - நகல் | 1 – 6 |
| 9 | அஞ்சல் அனுப்புகை பதிவேடு (04.10.2017 முதல் 25.10.2021 வரை) - நகல் | 1 – 6 |
| 10 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 247/2021 தேதி 11.09.2021 - நகல் | 1 – 6 |
| 11 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 248/2021 தேதி 11.09.2021 - நகல் | 1 – 6 |

| | | |
|---|---|---|
| 12 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 249/2021 தேதி 11.09.2021 - நகல் | 1 - 6 |
| 13 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண்.250/2021 தேதி 11.09.2021- நகல் | 1 - 6 |
| 14 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 251/2021 தேதி 11.09.2021 - நகல் | 1 - 6 |
| 15 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 252/2021 தேதி 11.09.2021 - நகல் | 1- 10 |
| 16 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 253/2021 தேதி 11.09.2021 - நகல் | 1- 10 |
| 17 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 254/2021 தேதி 11.09.2021 - நகல் | 1 – 6 |
| 18 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 267/2021 தேதி 23.09.2021 - நகல் | 1 – 6 |
| 19 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 268/2021 தேதி 23.09.2021 - நகல் | 1 – 6 |
| 20 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 269/2021 தேதி 23.09.2021 - நகல் | 1 – 6 |
| 21 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 270/2021 தேதி 23.09.2021 - நகல் | 1 – 6 |
| 22 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 271/2021 தேதி 23.09.2021 - நகல் | 1 – 6 |
| 23 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 272/2021 தேதி 23.09.2021 - நகல் | 1 – 6 |
| 24 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 273/2021 தேதி 23.09.2021 - நகல் | 1 – 6 |
| 25 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 274/2021 தேதி 23.09.2021 - நகல் | 1 – 6 |
| 26 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 275/2021 தேதி 23.09.2021 - நகல் | 1 – 6 |
| 27 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 276/2021 தேதி 23.09.2021-நகல் | 1 – 6 |
| 28 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 277/2021 தேதி 23.09.2021 - நகல் | 1 – 6 |
| 29 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 278/2021 தேதி 23.09.2021 - நகல் | 1 – 6 |
| 30 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண்.279/2021 தேதி 23.09.2021 - நகல் | 1 – 6 |
| 31 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 280/2021 தேதி 23.09.2021- நகல் | 1 – 6 |
| 32 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 281/2021 தேதி 23.09.2021 - நகல் | 1 – 6 |

| | | |
|---|---|---|
| 33 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 291/2021 தேதி 23.09.2021 - நகல் | 1 – 6 |
| 34 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை-ந.க.எண். 298/2021 தேதி 04.10.2021 -நகல் | 1 – 6 |
| 35 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை- ந.க.எண். 299/2021 தேதி 04.10.2021 - நகல் | 1 – 6 |
| 36 | தடையின்மைச்சான்று பெறுவதற்கான குறிப்பாணை- ந.க.எண். 319/2021 தேதி 25.10.2021 - நகல் | 1 – 6 |

இந்த திடீர் சோதனை நடவடிக்கையின் போது நிலைய அலுவலர் திரு.P. பூபதி மற்றும் நிலைய எழுத்தர் திரு.மாரிமுத்து ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேற்படி திடீர் தணிக்கை 29.10.2021 ஆம் தேதி 18.55 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 30.10.2021 ஆம் தேதி அதிகாலை 03.00 மணிக்கு முடிக்கப்பட்டு ஒரு நடவடிக்கை தயார் செய்யப்பட்டு அதில் அனைத்து விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திடீர் தணிக்கையின் போது பணம் ரூ.1,21,500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி தொகையானது நிலைய அலுவலர் திரு.பூபதி அவர்கள் தடையின்மை சான்று வழங்குவதற்கு, தான் பரிந்துரை செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து லஞ்சமாக பணம் வசூலிக்க சொன்னதும் அதன் அடிப்படையில் நிலைய எழுத்தர் திரு.மாரிமுத்து, நிலைய அலுவலரது உத்தரவிற்கிணங்க அந்த பணத்தை வசூலித்தும், வசூலிப்பதற்கு உடந்தையாக இருந்ததும் தெரிய வருகிறது. எனவே இத்துடன் தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,21,500/, பணம் வைக்கப்பட்டிருந்த காக்கி நிறக்கவர்கள் இரண்டு, குறிப்புகள் எழுதப்பட்ட வெள்ளை நிறத்தாள், ஆவண நகல்கள் மற்றும் வாக்கு மூலங்கள் ஆகியவற்றை இணைத்து மேல் நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். இப்புகார் குறித்து உரிய புலன்விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்புகார் குறித்து உரிய புலன்விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (Sdxxxxx) 30.10.2021, துணை ஆய்வுக்குழு அலுவலர்/வட்டாட்சியர், கோயம்புத்தூர். இணைப்பு:- 1) திடீர் சோதனை நடவடிக்கை குறிப்புகள் 2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,21,500/- 3) பணம் வைக்கப்பட்டிருந்த காக்கி நிறக்கவர்கள் இரண்டு 4) குறிப்புகள் எழுதப்பட்ட வெள்ளை நிறத்தாள் 5) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் 1 to 36, 6) பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள். Respected Sir, Received the complaint along with proceedings, Cash Rs.1,21,500/-, Khakhi colour Covers-2, details mentioned in white paper, Documents 1 to 36, Statements, on 30.10.2021 at 10.00hrs and

registered a case in Coimbatore V&AC Cr.No.25/2021/AC/CB u/s. 7(b), 7(b) r/w 12 of PC Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 30.10.2021 at 10.30 hrs. (Sdxxxxx) P.Parimaladevi, 30.10.2021 Inspr, V&AC, Coimbatore. மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு அத்துடன் கைப்பற்றப்பட்ட பணம், நடவடிக்கைகள் மற்றும் ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

(P.பரிமளாதேவி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.